வெளியிடக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

வ.வி. எண்.182868/2019

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.5467-5469/2017 லிருந்து எழுகிறது)

திராவிட முன்னேற்ற கழகம் (திமுக) ... மேல்முறையீட்டார்(கள்)

-எதிர்-

செயலாளர், ஆளுநர்மாளிகை

மற்றும் பலர் ...எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

உடன்

பல்வகை மனு எண்.2328/2019

(நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1267/2018 லிருந்து எழுகிறது)

(உடன் வ.வி. எண்.183503/2019 மற்றும் வ.வி. எண்.183515/2019 மற்றும் வ.வி.எண்.163332/2019 மற்றும் வ.வி. எண்.183506/2019 வ.வி. எண்.186721 மற்றும்186722/2019 மற்றும் வ.வி. எண்.185943/2019)

உடன்

அவமதிப்பு மனு(உரிமையியல்) வழக்கு குறிப்பு எண்(கள்).38969/2019

(நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1267/2018 லிருந்து எழுகிறது)

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1411/2019

(வ.வி.எண்.183815/2019, வ.வி.எண்.185955/2019,
வ.வி.எண்.183813/2019)

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1415/2019

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1413/2019

(வ.வி.எண்.183819/2019)

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1418/2019

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1417/2019

(வ.வி.எண்.185986/2019 மற்றும் வ.வி.எண்.185985/2019)

உடன்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1420/2019

(வ.வி.எண்.185976/2019 மற்றும் வ.வி.எண்.185974/2019)

மற்றும்

நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.43683/2019

தீர்ப்புரை

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் சார்ந்த அரசமைப்புக் கட்டளைக்கு இணங்குவதற்கான வழிகாட்டுதல்களைக் கோரி இந்த வழக்கிடை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முக்கியமான மனுதாரரான திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக), உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள்.5467-5469/2017-ல் மேல்முறையீட்டாளர் ஆவார். இதில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு ("மாநில தேர்தல் ஆணையம்") சில வழிகாட்டுதல்களை வழங்க மறுத்த மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை எதிர்த்துரைத்து இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது தமிழ்நாடு மாநில சட்டப் பேரவையில் முக்கிய எதிர்கட்சியாகவும் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாகவும் உள்ளது.

2. உரிமையியல் மேல்முறையீட்டில் திமுக, மாநில அளவில் ஆட்சியில் உள்ள கட்சியான அஇஅதிமுக, வேண்டுமென்றே தேர்தல்களை ஒத்தி வைத்து வருவதாகவும், அரசியல் சாசனத்திற்கு விரோதமாக தொகுதிகளை மாற்றி, தேவையற்ற அரசியல் ஆதாயம் பெறும் நோக்கில் சுழற்சிமுறையை மேற்கொள்ள மறுக்கிறதாகவும் கூறுகிறது. 243-D மற்றும் 243-T ஆகிய வகுமுறைகூறுகள் ஒவ்வொரு

தசாப்த கால மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பின்னரும் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதையும், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு 'சுழற்சி'அடிப்படையில் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கியுள்ளன. இதுவரை தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் (இரண்டாவது திருத்தம்) சட்டம், 2016 முந்தைய 2001 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தலின் அடுத்த சுழற்சியை நடத்த அனுமதித்து, அது அரசியலமைப்பு விதிகளுக்கு முரணானதால், ரத்து செய்யப்படக்கூடியதாக இருந்தது.

3. இருப்பினும் புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு எல்லை நிர்ணய ஆணையச் சட்டம், 2017-ன் கீழ், எல்லை நிர்ணய ஆணையம் நிறுவப்பட்டு, மேற்சொன்ன பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இவ்வாணையம் 25 ஜூலை, 2017 அன்று ஒரு விரிவான எல்லை நிர்ணயத்தை துவங்கி, இறுதியில் வார்டு எல்லை நிர்ணய வரைவு முன்மொழிவு ஒன்றை 20 செப்டம்பர், 2017 அன்று உருவாக்கியது. அதன்பின்னர், 20 டிசம்பர், 2017 முதல் 18 ஜனவரி, 2018 வரை பொதுமக்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளிடமிருந்து எழுத்துப்பூர்வ ஆட்சேபணைகள் பெறப்பட்டன. அத்தகைய ஆட்சேபணைகள்/ஆலோசனைகள் மற்றம் மாவட்ட எல்லை நிர்ணய

அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட திருத்தப்பட்ட முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, அதன் பின்னர் எல்லை நிர்ணய ஆணையம் தனது இறுதிப் பரிந்துரையை 31 ஆகஸ்ட், 2018 அன்று மாநில அரசுக்கு அனுப்பியது. அதன் பின்னர், 14 டிசம்பர் 2018 அன்று மாநில அரசால் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்மூலம் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி புதிதாக வரையறுக்கப்பட்ட வார்டுகள் அறிவிக்கப்பட்டன.

4. அதன்பிறகு, 20 பிப்ரவரி, 2019ல், எல்லை நிர்ணய ஆணையம் இடஒதுக்கீடுக்கான முன்மொழிவுகளை அனுப்பியது, அதன் மீதான பரிசீலனைக்குப் பின்னர், மாநில அரசானது 20 மே 2019, 21 மே 2019 மற்றும் 24 மே 2019 நாளிட்ட அறிவிப்புகளின் வாயிலாக மாநிலத்தில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அறிவித்தது.

5. விரைவில், 12 நவம்பர் 2019ல் தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களைப் பிரித்து ஒன்பது புதிய மாவட்டங்களை உருவாக்குவதற்கான அறிவிப்பை மாநில அரசு வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. வேலூர் மாவட்டமானது வேலூர், திருப்பத்தூர், மற்றும் ராணிப்பேட்டை என மூன்றாக பிரிக்கப்பட்டது; காஞ்சிபுரம்

மற்றும் செங்கல்பட்டு என காஞ்சிபுரம் இரண்டாக பிரிக்கப்பட்டது; விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி என விழுப்புரம் இரண்டாக பிரிக்கப்பட்டது; திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்கள் என திருநெல்வேலி இரண்டாக பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக, சில தாலுக்காக்களில் சில வருவாய் கிராமங்கள் சேர்க்கப்பட்டு அல்லது அகற்றப்பட்டு, மீண்டும் கட்டமைக்கப்பட்டன. மேற்சொன்ன அறிவிப்பின் பத்தி 7 பின்வருமாறு கூறுகிறது.

> '7. கிராம பஞ்சாயத்து, ஒன்றிய பஞ்சாயத்து மற்றும் மாவட்ட பஞ்சாயத்துக்கான வார்டு எல்லை வரையறையானது ஏற்கனவே தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994)-ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் வருகிற உள்ளாட்சித் தேர்தல்களுக்கான எல்லை வரையறையானது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்கள் பிரிக்கப்படுவதாக அறிவிக்கை வெளியிட்ட போதிலும், முன்னதாகவே உள்ளாட்சி தேர்தலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிப்பேராணை மனு, (உரிமையியல்) மனு எண்.1267/2018-ல் 17.07.2019 தேதியிட்ட உத்தரவிற்கிணங்க தொடர்ந்து நடைபெறும். வருகிற உள்ளாட்சி தேர்தல் நடவடிக்கைகள் முடிந்த பிறகு, ஏதேனும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறுவரையறை தேவைப்பட்டால், அதனை அரசு மேற்கொள்ளும்.'

6. மேற்கண்ட பகுதியில், 17 ஜூலை 2019 நாளிட்ட நீ.பே.ம.(உ) எண்.1267/2018-ன் மீதான இந்நீதிமன்றத்தின் உத்தரவு குறிப்பிட்டு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. மாநில

தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பல்வகை மனு எண்.2328/2019ல் வழங்கப்பட்ட இந்த உத்தரவு கீழ்கண்டவாறு:

'ஜீலை 2, 2019 அன்று, இந்நீதிமன்றம் பின்வரும் உத்தரவை பிறப்பித்தது:-

'1ம் எதிர்மனுதாரரான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், இறுதிக்கட்டத்தில் இருப்பதாக கூறப்படும் எல்லை நிர்ணயம் எவ்வளவு காலத்திற்குள் நிறைவுறும் என்பதையும், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை எப்பொழுது நடத்லாம் என்பதையும் குறிப்பிட்டு இரண்டு வார காலத்திற்குள் ஒரு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய வேண்டும்."

இவ்வழக்கை ஜீலை 17, 2019 அன்று முன்னிலைப்படுத்துக.

அதன்படி, ஜீலை 15, 2019 நாளிட்ட பிரமாண வாக்குமூலம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட பிரமாண வாக்குமூலத்தை நாங்கள் பரிசீலித்து, அதில் எல்லை நிர்ணய நிறைவு மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள் குறித்த அறிவிப்பு வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்தை விளக்கி குறிப்பிட்டுள்ள காரணங்களில் நாங்கள் நிறைவடைகிறோம். 2019 அக்டோபர் இறுதி வாரத்தில் தேர்தல் அட்டவணையை அறிவிக்கும் அறிவிப்பு வெளியிடப்படும் என்று மாநில தேர்தல் ஆணைய செயலாளர், பத்தி 28ல் கூறியுள்ளதையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

மாநில தேர்தல் ஆணைய செயலாளர் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள மேற்படி கூற்றை கருத்திற்கொண்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு உறுதியளித்தவண்ணம் செயல்பட மாநில அதிகாரிகளை நாங்கள் அனுமதிக்கிறோம், அதாவது, தேர்தல் அறிவிப்பை 2019 அக்டோபர் இறுதி வாரத்தில்

வெளியிட....."

7. அதன்பின்னர் இந்நீதிமன்றம் நவம்பர் 18, 2019 அன்று பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தது.

> **'13.12.2019 அன்று முன்னிலைப்படுத்துக, அந்த சமயத்தில் அனைத்து சட்ட நடைமுறைகளையும் முடித்த பிறகு அறிவிப்பு வெளியிடப்படும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.**
>
> கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் டாக்டர். அபிஷேக் மானு சிங்வி, இதனுடன் சில தொடர்புடைய வழக்குகளும் உள்ளதாக கூறுகிறார், அதாவது, சிறப்பு மேல்முறையீட்டு அனுமதி (உரிமையியல்) எண். 28881-28883/2016 மற்றும் தொகுப்பு.
>
> மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசரிடமிருந்து உத்தரவு பெற்றபின் பிற தொடர்புடைய வழக்குகளையும் சேர்த்துஉரிய அமர்வு முன்பாக முன்னிலைப்படுத்துக."

8. மேற்குறிப்பிட்டுள்ள உத்தரவிற்கு இணங்க, மாநில தேர்தல்ஆணையம் கடந்த 02.12.2019 அன்று அனைத்து கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவிலான தேர்தல் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு, வெளியிட்டுள்ளது:

<u>தேர்தல்நிகழ்ச்சிநிரல்</u>

1.	தேர்தல் அறிவிக்கை தொடர்பான பொது அறிவிப்பு மற்றும் வேட்பு மனு தாக்கல் தொடங்கும் நாள்	06.12.2019
2.	வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள்	13.12.2019
3.	வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல்	16.12.2019
4.	வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல்	18.12.2019
5.	வாக்கு பதிவு நடைபெறும் நாள் முதல் கட்டம் இரண்டாம் கட்டம்	 27.12.2019 30.12.2019
6.	வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள்	02.01.2020
7.	தேர்தல் நடவடிக்கை முடியும் நாள்	04.01.2020
8.	புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவி ஏற்பதற்கான அல்லது பதவி பிரமாணம் செய்வதற்கான முதல் கூட்டம்	06.01.2020
9.	மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்/ துணை தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைதலைவர் ஆகியோரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டநாள், இனத்திற்கு ஏற்றவாறு	11.01.2020

9. மேலும் அறிவிக்கப்பட்ட தேர்தல் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு வகை செய்கிறது.

'நேரடி தேர்தல்களுக்கான பதவியிடங்கள்:

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மொத்தம் 1,18,974

பதவியிடங்களை நிரப்ப நேரடி தேர்தல் நடத்தப்படும், அதில்,

- 31 மாவட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட 655 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் ;
- 388 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 6,471 ஊராட்சிய ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் ;
- 12,524 கிராம ஊராட்சிமன்ற தலைவர் பதவியிடங்கள் மற்றும் 99,324 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் உட்பட்டது.

அரசியல் கட்சி சார்ந்த மற்றும் அரசியல் கட்சி சாரா தேர்தல்கள் :

ஊராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கான தேர்தல் அரசியல் கட்சிசாராத தேர்தலாக இருக்கும் ; மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கான தேர்தல் அரசியல் கட்சி சார்ந்த தேர்தலாக இருக்கும்.

மறைமுக தேர்தல் :

கீழ்க்கண்ட பதவியிடங்களுக்கான மறைமுக தேர்தல்கள் 11.01.2020 அன்று உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் நடத்தப்படும்.

மாவட்ட ஊராட்சி தலைவர் பதவியிடங்கள்	31
மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்கள்	31
ஊராட்சி ஒன்றிய தலைவர்	388

பதவியிடங்கள்	
ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் பதவியிடங்கள்	388
கிராம ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்கள்	12,524
	13,362

10. டிசம்பர் 2, 2019 நாளிட்ட மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி குறிப்பின்படி, தேர்தல் செயல்முறை துவங்குவதற்கு முன்பு, தமிழ்நாடு அரசு மாவட்டங்களின் எண்ணிக்கையை 31-லிருந்து 39 ஆக உயர்த்தி, பல்வேறு தாலுகாக்களையும் மறுசீரமைத்தது புலனாகிறது. இருப்பினும், இன்னும் மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவிகளைப் பொறுத்த வரையில் 31 பதவியிடங்களுக்கு மட்டுமே தேர்தல்கள் நடத்த முற்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட முரண்பாடு, டிசம்பர் 2, 2019 நாளிட்ட அறிவிப்பை ரத்து செய்யக் கோரியும்; 39 வருவாய் மாவட்டங்களையும் உள்ளடங்கிய முழு மாநிலத்திற்கும் தேர்தல்களை நடத்தவும்; மற்றும் அத்தகைய உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்து சட்ட நடைமுறைகளையும் முடித்த பின்னரே நடத்தப்பட வேண்டும் (அதாவது

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களின் எல்லை நிர்ணயம் செய்த பின்னர்) என்று கோரியும், இம்மனுக்களை தாக்கல் செய்ய மேல்முறையீட்டாளர்களுக்கு அவசியம் எழுந்துள்ளது. கிராம, இடைநிலை அல்லது மாவட்ட அளவில் உள்ள கிராமத்தில் எந்தவொரு பஞ்சாயத்துக்கும் தேர்தல்களை அறிவிப்பதற்கு அல்லது நடத்துவதற்கு முன்பு முதலில் எல்லை நிர்ணயம், இட ஒதுக்கீடு, சுழற்சி முறைகளை செயல்படுத்தி, அவசியமான எல்லா சட்ட நடைமுறைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்களுக்கு குறிப்பிட்டு உத்தரவு வழங்க வேண்டப்பட்டுள்ளது.

11. கட்சிகளுக்கான கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் விரிவாகக் கேட்கப்பட்டு, மேலும், பல்வேறு சட்ட வகையங்களையும் அதனுடன் அரசியலமைப்பு சட்டம் பகுதி 9-ல் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களும் நன்கு ஆராய்ந்து, வகுமுறைக் கூறு 243-Bன் படி, ஒரு மாநிலத்தில் கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் பஞ்சாயத்துக்கள் கட்டாயம் உருவாக்க வேண்டும். மேலும், சட்ட வகுமுறைக்கூறு 243-Cன் படி ஒரு மாநில அரசானது இயன்றவரை, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், அந்தந்த பஞ்சாயத்துகளின் மக்கள் தொகைக்கேற்ப, தேவையான இடங்களை விகிதாச்சார அடிப்படையில் மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான முறையை பின்பற்ற வேண்டும்.

மேலும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் நிலை வரையறை பொறுத்து பல்வேறு தொகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும் மற்றம் வகுமுறைக்கூறு 243-Dன் படி ஒவ்வொரு பஞ்சாயத்திலும், அந்த பஞ்சாயத்தில் உள்ள மக்கள் தொகைக்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் பட்டியல் சாதியினர் மற்றும பட்டியல் பழங்குடியினருக்கு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

12. உள்ளாட்சி அமைப்புகளை நிறுவுகிறதற்கான எல்லை வரையறை நடவடிக்கையை உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து நிலைகளிலும் முழுவதுமாக நிறைவேற்றாத வரை, அரசியலமைப்பின் பகுதி-9ன் நோக்கம் முழுவதுமாக நிறைவேற்ற முடியாது. தமிழ்நாட்டில் அந்த நடவடிக்கையானது தமிழ்நாடு உள்ளாட்சி எல்லை மறு நிர்ணயம் ஒழுங்குமுறைகள் 2017 (தமிழ்நாடு உள்ளாட்சி எல்லை மறு நிர்ணயம் ஆணைய சட்டம் 2017)-ன் அடிப்படையில் வார்டுகள் வரையறை செய்யப்பட்ட நிலையில், அந்த அடிப்படையானது, கட்டாயம் அரசியலமைப்பு வகுமுறைக்கூறு 243-C உடன் இணைந்த வகுமுறைக்கூறு 243-B(1)-க்கு மாறுபட்டதாக இருக்கக்கூடாது.

13. எல்லை நிர்ணய செயல்முறை முடிவில் 31 வருவாய் மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் அதன் பின் மாவட்டங்களின்

எண்ணிக்கை 39 ஆக உயர்ந்தபோதிலும், புதிய எல்லை நிர்ணய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை கவனிக்கும்போது, மாநில அரசால் முன்சொல்லப்பட்ட அரசமைப்புக் கட்டளையை நிறைவேற்ற முடியாது என்பது தெளிவாகிறது. மக்கள் தொகை விகிதாச்சாரத்தை தெளிவுப்படுத்தும் கண்டறியப்பட்ட தரவு ஏதும் இல்லையாதலால், கிராம ஊராட்சி வார்டுகள் அல்லது மாவட்ட அமைப்புகளின் தலைவர்/துணைத்தலைவர் ஆகிய இரண்டிலும் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு தேவையான இட ஒதுக்கீட்டை வழங்க இயலாது. எனவே, புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களைப் பொறுத்து புதிய எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முதலில் நிறைவேறாதவரையில், புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் மாநில தேர்தல் ஆணையத்தால் டிசம்பர் 2, 2019-ல் அறிவிக்கப்பட்டபடி, தேர்தல் நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்பதில் எங்களுக்கு எந்த சந்தேகமுமில்லை. இந்நீதிமன்றத்தின் நவம்பர் 18, 2019 நாளிட்ட உத்தரவை சார்ந்து, இந்த ஒன்பது மாவட்டங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலைகளை நடத்துவதை மாநில அரசு நியாயப்படுத்த இயலாது, ஏனெனில் அந்த உத்தரவில், 'எல்லா சட்ட நடைமுறைகளையும்" நிறைவேற்றிய பின்னரே தேர்தல் அறிவிப்பினை

கட்டாயமாக்குகிறது.

14. தற்போதைய நடவடிக்கைகள் 'தேர்தலை கேள்கிக்குள்ளாக்குவதாகவும், வகுமுறைக்கூறு 243-0 மற்றும் 243-ZG-ன் படி அரசியலமைப்புத் தடைகளின் பார்வையில் நிலைக்கத்தக்கதல்ல" என்ற எதிர்மனுதாரர்களின் வாதம், எங்களை ஈர்க்கவில்லை, ஏனெனில் தற்போதைய நடவடிக்கைகள் நியாயமான தேர்தலுக்கான முன் நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்காக மாத்திரமே. எனவே, **இந்திய தேர்தல் ஆணையம் –எதிர்- அசோக்குமார் மற்றும் பலர்** [2000(8)SCC]-ல் ஒருங்கிணைந்த அமர்வின் பின்வரும் விகிதம் தற்போதைய வழக்குக்கு முற்றிலும் பொருந்தும்.

> '(2) கோரப்பட்டு வழங்கப்படும் எந்தவொரு முடிவும், தேர்தலின் முன்னேற்றத்திற்கு துணைபுரிந்து, தேர்தலை முடிப்பதற்கு ஏதுவாக இருந்தால், அது "தேர்தலை கேள்விக்குள்ளாக்குவது" ஆகாது. தேர்தல் நடவடிக்கைகளை முடிப்பதற்காகவோ அல்லது முன்னெடுப்பதற்காகவோ செய்யப்படும் எதையும் தேர்தலை கேள்விக்குள்ளாக்குவதாக விவரிக்க முடியாது.
>
> (3) மேற்கூறியவற்றிற்கு உட்பட்டு, தவறான அல்லது தன்னிச்சையான அதிகாரத்தை பயன்படுத்துதல் அல்லது சட்டப்பூர்வ அமைப்பானது சட்டத்தை மீறி செயல்பட்டதாக தெரியவருகிறது போன்ற சூழ்நிலைகளில் சட்டப்பூர்வ அமைப்பின் முடிவுகளை நீதிய மறு ஆய்வுக்குட்படுத்துவதற்கு ஏதுவாக, தேர்தல் ஆணையத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது வழங்கப்பட்ட உத்தரவுகள் நீதிய மறு ஆய்வுக்கு உட்பட்டது.

(4) தேர்தல் நடவடிக்கைகளுக்கு குறுக்கீடு செய்யாமலும், தடையின்றியும், தாமதப்படுத்தாமலும், வெறுமனே தேர்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை சரிசெய்வதற்கோ, அல்லது சுமூகமாக்குவதற்கோ, அதிலுள்ள தடைகளை நீக்குவதற்காக, அல்லது ஒரு முக்கிய ஆதாரம் தொலைந்து போகக்கூடியதாகவோ, அழிக்கப்படக்கூடியதாகவோ, முடிவுகள் அறிவிக்கப்படும் காலத்தில் மீட்கப்படக்கூடாததாகவோ இருக்கும்பட்சத்தில், அதனை பாதுகாக்க, நீதிமன்றத்தின் உதவியை நாடினால் நீதிமன்ற தலையீடு நீதிமன்ற அதிகார வரையறையின்றி கிடைக்கத்தக்கது."

15. முன்சொன்ன காரணங்களுக்காக, இந்த விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட உத்தரவுகளுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, முடித்து வைக்கப்படுகின்றன;

(அ) எதிர்மனுதாரர் - அதிகாரிகள் பின்வரும் ஒன்பது மறுசீரமைக்கப்பட்ட மாவட்டங்களை தவிர கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் உள்ள மற்ற அனைத்து பஞ்சாயத்துக்களிலும் தேர்தல் நடத்த வேண்டும்:

i. காஞ்சிபுரம்

ii. செங்கல்பட்டு

iii. வேலூர்

iv. திருப்பத்தூர்

v. ராணிப்பேட்டை

vi. விழுப்புரம்

vii. கள்ளக்குறிச்சி

viii. திருநெல்வேலி

ix. தென்காசி ;

ஆ) புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களிலும் சட்டத்திற்குட்பட்டு, எல்லை நிர்ணயம் செய்யவும், அதன் பின்னர் நான்கு மாத காலத்திற்குள்ளாக கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் தங்கள் பஞ்சாயத்துக்களில் தேர்தல்களை நடத்தவும் எதிர்மனுதாரர்களுக்கு (எல்லை நிர்ணய ஆணையம் உட்பட) ;

இ) மற்ற மாவட்டங்களில் கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் பஞ்சாயத்துக்களில் தேர்தல்களை நடத்துவதற்கு எதிராக சட்டப்படியான தடையேதும் இருக்காது ;

ஈ) மாநில தேர்தல் ஆணையம், மேலே உத்தரவு 'அ'-வில் கண்ட விபரங்களின்படி, மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் பஞ்சாயத்துக்களில் தேர்தல்களை அறிவிக்க வேண்டும்.;

உ) தேர்தல்களை நடத்தும்போது எதிர்மனுதாரர்கள் எல்லா நிலைகளிலும் தமிழ்நாடு பஞ்சாயத்து (இடஒதுக்கீடு மற்றும் சுழற்றி முறை இடஒதுக்கீடு) விதிகள், 1995 விதி-6ன் படி, விகிதாச்சார இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும்.

16. நியாயமாக, தமிழ்நாடு அரசின் கற்றறிந்த தலைமை வழக்குரைஞரும் மேற்கண்ட உத்தரவின்படி, தேர்தல் நடவடிக்கைகளை

மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

17. ஏனெனில், இதனுடன் இணைந்த மேல்முறையீடுகளில் எழுந்துள்ள ஒரே கோரிக்கையானது, உள்ளாட்சி தேர்தல் ஆனது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நடைபெற வேண்டும் என்றும், 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நடைபெறக் கூடாது என்பதாகும். மற்றும், இந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள் சமீபத்திய எல்லை நிர்ணய நடவடிக்கைகளை (புதிதாக மறுசீரமைக்கப்பட்ட 9 மாவட்டங்களைத் தவிர) மேற்கொள்ளும்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பை ஏற்கனவே பயன்படுத்தியுள்ளனர் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த மேல்முறையீடுகள் பயனற்றவையாக கருதப்பட்டு, அதன்படி தீர்வு செய்யப்படுகின்றன.

18. அனைத்து நிலுவை வழக்கிடை விண்ணப்பங்களும் அவ்வாறே முடித்துவைக்கப்படுகிறது.

.....மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் திரு. ச.அ. போப்டே

.....மாண்புமிகு நீதியரசர் திரு. ப.ரா. கவாய்

.....மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யகாந்த்

புதுதில்லி

தேதி : 06.12.2019.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."